**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | |
|---|---|
| Case Number | CC No. 220/2018 |
| Deposition of witness | PW- 1 /LW- 1 |
| Name | திரு. முருகேசன் |
| Father's/Husband Name | திரு. சாமிகண்ணு |
| Village | தோப்பநாயக்கம் |
| Taluk | திருவோணம் |
| Age | 41/2026 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 26th day of May 2026**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**
**(சாட்சியை நீதிமன்ற காவலர் திரு.மனோபாரதி 1375 என்பவர் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது தோப்பநாயக்கம் கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி என் சித்தப்பா ஆவார். ஆஜர் எதிரியும் நானும் வாய்தகராறாக பேசிக்கொண்டோம். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டோம். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையது. அதில் உள்ள விபரம் தெரியாது. அந்த கையொப்பம் **அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

( அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது )

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலிசார் என்னை விசாரித்ததாகவும், கடந்த 13.07.2018 இரவு 09.00 மணியளவில் வெளியூர் சென்றுவிட்டு ஊருக்கு திரும்பிய போது ஊர் பாலத்து அருகில் வந்துகொண்டிருந்த போது செந்தில்குமார் என்பவர் என்னை

வழிமறித்து நான் ஓட்டி வந்த பைக்கை நிறுத்த சொன்னதாகவும், நான் ஏன் என்று கேட்டதற்கு வண்டியை நிறுத்துடா தேவடியா மவனே என்று சொல்லி உன்னை நடுரோட்டில் வைத்து செருப்பால் அடிப்பேன் என்று சொல்லி செருப்பால் அடித்ததாகவும், அப்போது ரெங்கராஜ் விலக்கிவிட்டதாகவும் எதிரி இடுப்பில் வைத்திருந்த கத்தியை எடுத்து நடுரோட்டில் வைத்து கொலை செய்யாமல் விடமாட்டேன் என்று மிரட்டி சென்றதாகவும், போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானமாகிவிட்டபடியாலும், எதிரி தெரிந்த நபர் என்பதாலும், தங்களுக்கே தெரிந்த காரணங்களுக்காகவும், எதிரியை குற்ற வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில் எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் உண்மைக்கு புறம்பாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- திரு.த.சுதர்சன் M.A.,L.L.B.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை